<u>உசிலம்பட்டி நகராட்சி மன்றம்</u>
<u>நகர்மன்ற சாதாரணக்கூட்டம்</u>
<u>நாள். 25.01.2023 புதன் கிழமை நேரம் – காலை 11.00 மணி</u>

---

<u>மன்றப்பொருள்: 1</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க எண் 35945/2022/EA2-SWM-13 நாள் 10.01.2023-இல் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் குப்பைகள் உருவாகும் இடங்களலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்னியாக பிரித்து சேகரம் செய்து நுண் உர மையம் மற்றும் மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு சேர்க்கடன் ஒன்றிற்கு ரூ.4827.38/- என நிர்ணயம் செய்து தனியார் ஒப்பந்த நிறுவனம் மூலம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.171.55 (இலட்சம்) மூன்று ஆண்டுகளுக்கு மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்தரவின் படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தினசரி சேகரமாகும் கழிவுகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து சேகரம் செய்யும் பணிகளுக்கு மூன்று ஆய்டுகளுக்கு தகுதியான தனியார் நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தபுள்ளி கோரவும், மேற்படி பணிகளுக்கு ஆகும் செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2மேற்கண்ட பணிக்கான செலவினங்களை பொது நிதி மற்றும 15th CFC SWM TIED மானியத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.2255/2021/எச்1)

**தீர்மானம் எண்.265**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>மன்றப்பொருள்: 2</u>

இந்நகராட்சி வார்டு எண் 3 அன்னம்பாரிபட்டி பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று அப்பகுதியில் பைப்லைன் வசதி மற்றும சின்டெக்ஸ் அமைத்தல் பணியினை ரூ.4.00 (நான்கு இலட்சம்) மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.131/2022/இ1)

**தீர்மானம் எண்.266**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>மன்றப்பொருள்: 3</u>

இந்நகராட்சி வார்டு எண் 4 பகுதி பொதுமக்கள் கோரிக்கைகிணங்க பள்ளிவாசல் தெரு, முத்தாலம்மன் கோவில் தெரு, வத்தலகுண்டு மெயின் ரோடு, நீராவி மேட்டு தெரு(அனைத்து பகுதி) ஆகிய பகுதிகளில் பைப்லைன் வேலை மற்றும சின்டெக்ஸ் அமைத்தல் பணியினை ரூ.9.00 (ஒன்பது இலட்சம்) மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

__அலுவலகக்குறிப்பு__

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.132/2023/இ1)

**தீர்மானம் எண்.267**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

__மன்றப்பொருள்: 4__

இந்நகராட்சி வார்டு எண் 23 சடையாண்டி கருப்பு தேவர் தெருவில் பொதுமக்கள் கோரிக்கைகிணங்க புதிதாக போர்வெல் மற்றும் பைப்லைன், சின்டெக்ஸ் அமைத்தல் மற்றும் அப்பகுதி பெண்கள் சமுதாய கழிப்பறை புனரமைத்தல் பணிகள் ரூ3.50 (மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம்) மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

__அலுவலகக்குறிப்பு__

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).மேற்படி குடிநர் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.35/2023/இ1)

**தீர்மானம் எண்.268**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

__மன்றப்பொருள்: 5__

இந்நகராட்சி வார்டு எண் 24 மயானம் செல்லும் சாலையானது மிகவும் சேதமடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.எனவே மேற்படி சாலையினை தார்சாலையாக புதிதாக அமைக்க வேண்டி அப்பகுதி மக்கள் கோரிக்கைவிடுத்ததின் பேரில் ரூ.20.00 (இருபது இலட்சம்) மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

__அலுவலகக்குறிப்பு__

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).மயான பகுதியில் தார்சாலை அமைக்க கோருவதால் பொதுமக்கள் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.21/2023/இ1)

**தீர்மானம் எண்.269**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

__மன்றப்பொருள்: 6__

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண் 18 ஆவடைதங்கநாடார் தெருவில் அமைந்துள்ள மகளிர் கழிப்பறையில் கேட் கைபிடி, மின் விளக்கு வசதி மற்றும இதர பணிகள் மேற்கொள்வது பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எ. | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண் 18 ஆவடைதங்கநாடார் | 3.00 | திரு. ரவிக்குமார், காண்ட்ராக்டர், உசிலம்பட்டி | குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | தெருவில் அமைந்துள்ள மகளிர் கழிப்பறையில் கேட் கைபிடி, மின் விளக்கு வசதி மற்றும இதர பணிகள் மேற்கொள்வது | | திருமதி. விஜயலட்சுமி உசிலம்பட்டி | அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ரவிக்குமார் ஒப்பந்ததாரர் உசிலம்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).நகர்மன்ற முன் அனுமிதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.20/2023/இ1)

**தீர்மானம் எண்.270**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>மன்றப்பொருள்: 7</u>

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண் 19 குருசாமி கோவில் அருகில் MLA FUND 2021-2022 பல்நோக்கு கட்டிடம் கட்டுதல் பணி மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளது. மேற்படி பல்நோக்கு கட்டிடத்தில் Grill gate மற்றும் Right arrangement இதர பணிகள் மேற்கொள்ள அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனை தொடர்ந்து இடம் நேராய்வு செய்யப்பட்டு ரூ.3.00 (முன்று இலட்சம்) மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).நகர்மன்ற முன் அனுமிதி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.20/2023/இ1)

**தீர்மானம் எண்.271**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>மன்றப்பொருள்: 8</u>

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண் 10 மற்றும் வார்டு எண் 11 கருப்பு கோவில் தெரு பகுதியில் சிறு பாலங்கள் அமைத்தல் பணியினை ரூ.1.50/- (இலட்சம்) மதிப்பீட்டில் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.135 /2023/இ1)

**தீர்மானம் எண்.272**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 9</u>**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண் 11 மற்றும் வார்டு எண் 17 பகுதியில் கண்ணன் தியட்டர் எதிர்புறம் மற்றும் கனரா பேங்க் தெரு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் வாய்க்கால் கட்டும் பணியினை ரூ.5.00 (ஐந்து இலட்சம்) மதிப்பீட்டில் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).நகர்மன்ற முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வலுழங்கலாம்.

(ந.க.எண். 137 /2023/இ1)

**தீர்மானம் எண்.273**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 10</u>**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண் 01 மாமரத்துபட்டியில் அமைந்துள்ள ஆண்கள், பெண்கள் சமுதாய கழிப்பறையில் Bio Digester செப்டிக் டேங்க் அமைத்தல் பணியினை ரூ.2.00 (இரண்டு இலட்சம்) மதிப்பீட்டில் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).நகர்மன்ற முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வலுழங்கலாம்.

(ந.க.எண்.132 /2023/இ1)

**தீர்மானம் எண்.274**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 11</u>**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண் 17 மற்றும் வார்டு எண் 12 இரண்டிற்கும் இடைப்பட்ட இடத்தில் உள்ள வாறுகாலினை பொது சுகாதாரம் அவசியம் கருதி ஜேசிபி இயந்திரம் கொண்டு துர்வாரும் பணியினை ரூ.2.00 (இரண்டு இலட்சம்) மதிப்பீட்டில் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.137 /2023/இ1)

**தீர்மானம் எண்.275**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 12</u>**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண் 04 SOR நகர் 4வது தெருவில் அமைந்துள்ள சிறுபாலம் சேதமடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ளதால் அப்பகுதி மக்களின் கோரிக்கைகிணங்க ரூ.50000/– (ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் சிறுபாலத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.136 /2023/இ1)

**தீர்மானம் எண்.276**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 13</u>**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு எண் 12 பேருந்து நிலைய பகுதியில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைத்து 30 வருடங்களுக்கு மேலான காரணத்தினால் மேல்நிலை நீர் தேக்க தொட்டியின் அடிபுறம் பழுதாகி அபாய சூழ்நிலையில் உள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி தொட்டியில் மராமத்து பணியினை தோராயமாக ரூ.7.00 (ஏழு லட்சம்) மதிப்பீட்டில் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் வழங்கல் நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.135 /2023/இ1)

**தீர்மானம் எண்.277**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 14</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14, 16, 2 பொதுமக்கள் மக்கள் மற்றும் வார்டு பிரதிநிதிகளிடமிருந்து வரப்பெற்ற புகாரின் அடிப்படையில் மேற்படி வார்டுகளில் புல் மற்றும் பதர்கள் அதிகரித்து காணப்படுவதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஜேசிபி இயந்திரம் மூலம் அகற்றவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30000/- மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1950/2021/எச்.1)

**தீர்மானம் எண்.278**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 15</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 58AW2747க்கு ஆயில் சர்வீஸ் மற்றும் இதர சர்வீஸ்கள் மேற்கொண்டு ஒரு வருட காலத்திற்கு மேலாககிவிட்டதாலும் வாகனம் 20000 கிலோ மீட்டருக்கு மேல் ஓடியுள்ளதால் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக M/S Automative manufactures private limited (Mahindra Rise) பழுது நீக்கம் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணிக மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2887/2013/எச்1)

**தீர்மானம் எண்.279**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>மன்றப்பொருள் 16</u>

திடக்கழிவு மேலாண்மை பணிகளை பெருகிவரும் குடியிருப்புகள் மற்றும் மக்கள் தொகைக்கு ஏற்ப கழிவுகளை தரம் பிரித்து பெறவும், வடிகால் சுத்தம் செய்யவும், வாறுகால்களில் மண் அகற்றவும், சாலையோரங்களில் மண் அகற்றவும், சேகரிக்கப்பட்ட மக்கும் கழிவுகளை நுண் உர மையத்திற்கு எடுத்துச்செல்லவும், பொது கழிப்பிடங்களை பராமரிக்கவும் துய்மை பணியாளர்கள் தேவைப்படுவதால் பொதுச்சுகாதாரப்பணிகள் அவசர அவசியம் கருதி வெளிக்கொணர்வு முகமை மூலம் போதுமான பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது தொடர்பாக மதிப்பீடு பிரேரணை இசைவு பெற்று வருவதை எதிர்நோக்கி திரு. எம்.பத்மநாபன் தனியார் மய ஒப்பந்தம் (பழைய வார்டு எண்கள் 13,14,15,16,17,18) ஜனவரி 2023 வரை நீட்டிப்பு செய்யப்பட்டிருந்தது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க எண் 35945/2022/EA2–SWM–13 நாள் 10.01.2023–இல் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் குப்பைகள் உருவாகும் இடங்களலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்னியாக பிரித்து சேகரம் செய்து நுண் உர மையம் மற்றும் மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு சேர்க்கடன் ஒன்றிற்கு ரூ.4827.38/– என நிர்ணயம் செய்து தனியார் ஒப்பந்த நிறுவனம் மூலம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.171.55 (இலட்சம்) மூன்று ஆண்டுகளுக்கு மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் படி ஒப்பந்த பணிகள் முடிவடைந்து தகுதியான தனியார் நிறுவனத்தை தேர்வு செய்யும் வரை பழைய ஒப்பந்தார திரு.எம்.பத்மநாபன் என்பவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிபபடையில் நீட்டிப்பு செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

இந்நகராட்சியின் பொது சுகாதாரத்தினை பேணிக்காக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டும், அதே சமயத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க எண் 35945/2022/EA2–SWM–13 நாள் 10.01.2023–இன் படி ஒப்பந்த பணிகள் முடிவடையும் வரை திரு. எம்.பத்மநாபன் ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தை புதுப்பித்து உத்தரவு வழங்கவும், அதனால் ஏற்படும் செலவினத்தொகையை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 930/2018/எச்.1)

**தீர்மானம் எண்.280**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>மன்றப்பொருள் 17</u>

திடக்கழிவு மேலாண்மை பணிகளை பெருகிவரும் குடியிருப்புகள் மற்றும் மக்கள் தொகைக்கு ஏற்ப கழிவுகளை தரம் பிரித்து பெறவும், வடிகால் சுத்தம் செய்யவும், வாறுகால்களில் மண் அகற்றவும், சாலையோரங்களில் மண் அகற்றவும், சேகரிக்கப்பட்ட

மக்கும் கழிவுகளை நுண் உர மையத்திற்கு எடுத்துச்செல்லவும், பொது கழிப்பிடங்களை பராமரிக்கவும் துய்மை பணியாளர்கள் தேவைப்படுவதால் பொதுச்சுகாதாரப்பணிகள் அவசர அவசியம் கருதி வெளிக்கொணர்வு முகமை மூலம் போதுமான பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது தொடர்பாக மதிப்பீடு பிரேரணை இசைவு பெற்று வருவதை எதிர்நோக்கி திரு.கே.ஹரிஹரன் தனியார் மய ஒப்பந்தம் (பழைய வார்டு எண்கள் 1,2,3,4,5,8,9) ஜனவரி 2023 வரை நீட்டிப்பு செய்யப்பட்டிருந்தது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க எண் 35945/2022/EA2–SWM–13 நாள் 10.01.2023–இல் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் குப்பைகள் உருவாகும் இடங்களிலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்னியாக பிரித்து சேகரம் செய்து நுண் உர மையம் மற்றும் மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு சேர்க்கடன் ஒன்றிற்கு ரூ.4827.38/– என நிர்ணயம் செய்து தனியார் ஒப்பந்த நிறுவனம் மூலம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.171.55 (இலட்சம்) மூன்று ஆண்டுகளுக்கு மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் படி ஒப்பந்த பணிகள் முடிவடைந்து தகுதியான தனியார் நிறுவனத்தை தேர்வு செய்யும் வரை பழைய ஒப்பந்தாரர் திரு.கே.ஹரிஹரன் என்பவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிபபடையில் நீட்டிப்பு செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

இந்நகராட்சியின் பொது சுகாதாரத்தினை பேணிக்காக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டும், அதே சமயத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க எண் 35945/2022/EA2–SWM–13 நாள் 10.01.2023–இன் படி ஒப்பந்த பணிகள் முடிவடையும் வரை திரு.கே.ஹரிஹரன் ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தை புதுப்பித்து உத்தரவு வழங்கவும், அதனால் ஏற்படும் செலவினத்தொகையை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 930/2018/எச்.1)

**தீர்மானம் எண்.281**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>மன்றப்பொருள் 18</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் 21 எண்ணம் கொசு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு M/Sதேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி நிறுவனம் மூலம் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கோள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தகாலம் 31.10.2022 உடன் முடிவடைவதால் தற்போது டெங்கு, கொரோனா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்க பொது சுகாதார அவசர அவசியம் கருதி கூடுதலாக 20 நபர்களை 03.12.2022 முதல் 31.01.2023 வரை ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய அடிப்படையில் M/Sதேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை மாதம் ஒன்றிற்கு ரூ. 4.50/– பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1).மன்றம் அனுமதி வழங்கலாம்.

2).பொது சுகாதார அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 91/2015/எச்1)

**தீர்மானம் எண்.282**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள் 19</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் 41 எண்ணம் கொசு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு M/s. தேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி நிறுவனம் மூலம் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கோள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தகாலம் ஜனவரி 2023 உடன் முடிவடைவதால் தற்போது டெங்கு, கொரோனா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்க பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய அடிப்படையில் M/Sதேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி மூலம் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023 ஆகிற இரண்டு மாத காலத்திற்கு 31 எண்ணம் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை மாதம் ஒன்றிற்கு ரூ. 3.50/- பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1).மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 91/2015/எச்1)

**தீர்மானம் எண்.283**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 20</u>**

இந்நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநராக பணிபுரியும் திரு.எஸ்.ஜெயராஜ்பாண்டி என்பவரது ஒப்பந்த காலம் 22.01.2023 உடன் முடிவடைவதால் மேற்படி ஒப்பந்தத்தை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பது தொடர்பாக TEXCO (Tamilnadu Ex sevieman's corporation limited) மதுரை நிறுவன கடித எண் 8145/2023-2024 நாள் 21.12.2022-இல் கீழ்க்கண்ட சம்பள தொகைக்கு கோரப்பட்டுள்ளது.

ஓட்டுநர் ஒரு நபர் ஊதியம் - ரூ.22003/-

| | | |
|---|---|---|
| Service charge | - | 12 சதவிகிதம் |
| GST | - | 18 சதவிகிதம் |

எனவே மேற்படி தொகைக்கு ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தத்தை புதுப்பிக்கவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.254/2017/சி1)

**தீர்மானம் எண்.284**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>மன்றப்பொருள்: 21</u>**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின்கீழ் நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 2014-இன் பிரிவு 38(1) இன்கீழ் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு

நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு நடைபாதை விற்பனை ஒழுங்குப்படுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம் 2015–இன்விதி II–இன்கீழ் அமைக்கப்பட வேண்டிய நகர விற்பனைக் குழுவின் எண்ணிக்கையிலான உறுப்பினர்களை தேர்வு செய்வது தொடர்பாக தேர்தல் நடத்துவது தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தல் போன்ற பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்படி செலவினத்தை NULM திட்ட நிதி மற்றும் வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளலாம்.

3). பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1624/2022/எப்.1)

**தீர்மானம் எண்.285**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>மன்றபொருள்: 22</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரம் செய்யப்படும் மக்கும் கழிவுகள் நுண்ணுரம் மையத்தில் உள்ள கழிவுகள் அறைக்கும் இயந்திரம் மூலம் கழிவுகள் அரைக்கப்பட்டு உரமாக தயாரிக்கப்படுகிறது. மேற்படி இயந்திரத்தில் பிளேடுகள் பழுதடைந்து உள்ளதால் மேற்படி இயந்திரத்திற்கு புதிய பிளேடுகள் பொருத்த விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

ஸ்ரீ செல்லாயி அம்மன் வெல்டிங் ஒர்க்ஸ், சிவகாசி – ரூ.27500/–

கிளாசிக் பவர் எல்க்ட்ரிக்கல்ஸ், சிவகாசி – ரூ.26000/–

R K R Lathe works, சிவகாசி – ரூ.24200/–

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த R K R Lathe works, சிவகாசி நிறுவனம் மூலம் பழுது பணிகள் பார்க்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2639/2022/எச்.1)

**தீர்மானம் எண்.286**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

ஆணையாளர்

உசிலம்பட்டி நகராட்சி